ஸ்காபறோவில் பச்சைக் கொள்கலத் திட்டம்
இதழ் 2—அக்டோபர் 2003

## ஸ்காபறோவின் சிறப்பு: அதன் பச்சைக் கொள்கலத் திட்டம்!

மக்களின் உள்ளக் கிடக்கை அவர்கள் ஆற்றும் செயலில் பெரிதும் துலங்கும்.

சரி, ஸ்காபறோ வாசிகள் என்ன *செய்கிறார்கள்* என்று நினைக்கிறீர்கள்? உங்களுள் 90 வீதத்துக்கு மேற்பட்டோர் உங்கள் பச்சைக் கொள்கலங்களை நிரப்பி, அவற்றைத் தெருவோரம் தள்ளிவிடுகிறீர்கள். கிழமைக்கொரு தடவை அவற்றிலிருந்து குப்பை அகற்றப்படுகிறது. இது எத்துணை சிறந்த பலாபலன்! உற்சாகமூட்டும் பலாபலன்!

பச்சைக் கொள்கலத் திட்டம் ஒரு முக்கியமான திட்டம் என்றும், பாடுபடுவதற்கு உரிய பயனளிக்கும் திட்டம் என்றும் ஸ்காபறோ வாசிகள் *கருதுகிறார்கள்* என்பது தெளிவாகத் தெரிகிறது. நீங்கள் இந்த முன்முயற்சியில் உற்சாகமாக ஈடுபடுவதற்கும், உங்கள் சமூகத்தின் மீதும் சுற்றாடலின் மீதும் அக்கறை செலுத்துவதற்கும் நன்றி.

உணவுக் கழிவு, கழிவுக் கடதாசி, உணவுப் பொதி போன்ற சேதனக் கழிவுகளை நீங்கள் புறம்பாக்கும் ஒவ்வொரு தடவையும், (விபரங்களுக்குப் 4ம் பக்கம் பார்க்கவும்) றொறன்ரோ மாநகர வீடு வளவுகளிலிருந்து நிரவல்புலத்துக்கு அனுப்பப்படும் கழிவுகளை நீங்கள் சுயமாகவே குறைக்கிறீர்கள் என்பது உறுதி.

## இந்த எண்ணிக்கைகளைச் சற்று நோக்கவும்:

- ஸ்காபறோவில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் கிழமைக்கொரு தடவை பச்சைக் கொள்கலத்திலிட்டு அகற்றப்படும் சேதனக் கழிவின் தொகை 4 கிலோகிறாம் ஆகும்.
- இற்றைவரை கழிவகற்றிய புள்ளிவிபரங்களின்படி இனிமேல் வருடாந்தம் மிச்சிக்கன்-நிரவல்புலத்துக்கு அனுப்பப்படும் சேதனக் கழிவில் 23,000 தொன் குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- ஸ்காபறோ வாசிகளின் முயற்சியினால் ஆண்டுதோறும் மிச்சிக்கன்-நிரவல்புலத்துக்குச் செல்லும் குப்பை வண்டிகளின் தொகையில் 670 குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## நிரவல்புலத்தை தவிர்ப்போம்!

றொறன்ரோ மாநகரம் கடந்த இளவேனில் பருவத்தில் இரண்டு கொள்கலங்களை உங்கள் வீட்டு வாயிலில் வைத்து ஒப்படைத்தது. தற்பொழுது அந்த வீட்டுப்புறத்து பச்சைக் கொள்கலத்தையும் சமையல் கூடத்து மங்கல் கொள்கலத்தையும் உங்கள் நீலநிற, சாம்பல்நிறப் பெட்டிகளைப் போன்று நீங்கள் பாவிக்கப் பழகிவிட்டீர்கள்.

உங்கள் புதிய பச்சை, மங்கல் கொள்கலங்கள் உங்கள் மீள்பாவனைக் கொள்கலன்களுடன் இணைகின்றன. அந்த வகையில் 2010 வாக்கில் நிரவல்புலத்தை ஒழிப்பதற்கென றொறன்ரோ மாநகரம் இட்ட திட்டத்தை நோக்கி இன்னோர் அடி எடுத்து வைப்பதாக இது அமைகிறது.

றொறன்ரோ மாநகரத்தின் கீல்-நிரவல்புலம் 2002ல் மூடப்பட்டது. தற்பொழுது மாநகரத்தின் கழிவு முழுவதும் மிச்சிக்கன் என்ற அமெரிக்கப் புலத்துக்கு ஏற்றி அனுப்பப்படுகிறது. நிரவல்புல நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு கடுமையான கொள்கைகளும் நடைமுறைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. எனினும் எமது உலகத்தின் எந்தப் பாகத்தையும் நிரவல்புலமாகப் பாவிப்பதில் அர்த்தமில்லை என்பதே உண்மை.

நிரவல்புலத்துக்குச் செல்லும் கழிவில் 30% சேதனக் கழிவே என்பதைப் பலர் உணராதிருக்கக்கூடும். பச்சைக் கொள்கலத் திட்டத்தின்படி அந்த சேதனக் கழிவு நிரவல்புலம் செல்லாது கலப்புரமாக மாறிப் பயன்படுகிறது.

நாகரிகம் அடைந்த மக்கள் என்ற வகையில் எம்மை எம்மால் துப்புரவாக வைத்திருக்க முடியும் என்பதை நிரூபிப்பதற்கு இத்திட்டம் இடம் கொடுக்கிறது.

## பச்சைக் கொள்கலத் திட்டம் இயங்கும் விதம்

1. ஒன்றில் உங்கள் சமையலறைக் கொள்கலத்துக்குள் ஒரு பிளாஸ்திக்குப் பையை இட்டுப் பாவிக்கலாம் (விசேடமான பைகளை வாங்கத் தேவையில்லை. கொள்வனவுப் பைகளையே பாவிக்கலாம்), அல்லது உங்கள் பச்சைக் கொள்கலத்துக்கு ஓர் உள்ளுறையைப் பாவிக்கவும். இரண்டு கொள்கலங்களுக்கும் உள்ளுறை தேவையில்லை.
2. வேறு பிளாஸ்திக்கு வகைகளை, எடுத்துக்காட்டாக பிளாஸ்திக்கு உறை, பிளாஸ்திக்கு பொதி, பாண் பொதி வகைகளைப் பாவிக்க வேண்டாம். (இத்தகைய சிறிய பொதி வகைகள் எமது நடவடிக்கைக்குத் தடங்கல் விளைவிக்கும்).
3. உங்கள் உள்ளக சமையலறைக் கொள்கலத்துக் கழிவுகளை (பிளாஸ்திக்குப் பையுடன் (பைகளுடன்)) உங்கள் வெளிப்புறத்துப் பச்சைக் கொள்கலத்தினுள் இடவும் (உங்கள் பைகளின் வாயை முறுக்கி அல்லது இளக்கிக் கட்டவும். அப்படிச் செய்தால், மாநகரத்துப் படிமுறையிடல் களத்தில் வைத்து அவற்றைத் திறப்பது எளிது).
4. உங்கள் கழிவு அகற்றப்படுவதற்குரிய நாளில் காலை 7 மணி அளவில் உங்கள் பச்சைக் கொள்கலத்தைத் தெருவோரத்தில் வைக்கவும் (எவற்றை எப்பொழுது இட்டு வைப்பது என்பதை அறிவதற்கு உங்கள் கழிவகற்றல் அட்டவணையைப் பார்க்கவும்* - அல்லது எமது இணையத் தளத்தை அணுகவும்: www.toronto.ca/garbage).
5. வெளியே வைப்பதற்கு முன்னர் உங்கள் பச்சைக் கொள்கலத்தை அவதானிக்கவும். நீங்கள் பச்சைக் கொள்கலத்தின் உள்ளுறையாகப் பாவித்த பிளாஸ்திக்குப் பை வெளியே தலை நீட்டாது உள்ளே முழுவதாக அமுங்கச் செய்யவும். (பிளாஸ்திக்குப் பை வெளியே தலை நீட்டினால் விலங்குகள் அவற்றைப் பற்றி இழுத்து கொள்கலத்தைக் கவிழ்த்துவிடும்).
6. உங்கள் பச்சைக் கொள்கலத்தினுள் கழிவுகளை மிதமிஞ்சி இடக்கூடாது. 20 கிலோ (44 இறாத்தல்) எடைக்கு மேற்பட்ட ஒரு கொள்கலமோ பையோ ஏற்கப்பட மாட்டாது. மிதமிஞ்சிய கழிவுகளை ஒரு கண்ணாடிப் பிளாஸ்திக்குப் பையிலிட்டு அக்கொள்கலத்தின் அருகில் வைக்கவும். அல்லது $15 விலைக்கு இன்னொரு கொள்கலத்தை வாங்கிப் பாவிக்கவும் (3ம் பக்கத்தில் "புதிய கொள்கலங்களை வாங்கும் இடம்" என்ற கூறினைப் பார்க்கவும்).
7. உங்கள் பச்சைக் கொள்கலத்துக் கழிவுகள் தெருவோரத்தில் வைத்து அகற்றப்பட்டு, மாநகரத்துக் கழிவகற்றல் வாகனம் ஒன்றில் இருக்கும் இரண்டு கூறுகளுள் ஒன்றினுள் ஏற்றப்பட்டு, பிற்பாடு மாநகரத்துக்குச் சொந்தமான டவிறின் - சேதனக் கழிவு படிமுறையிடும் களத்துக்கு கொண்டு செல்லப்படும்.
8. கள இயக்குநர்கள் சேதனக் கழிவைப் பார்வையிட்டு, பருத்த தேவையற்ற கூறுகளை அகற்றுவாரகள். சேதனக் கழிவு anaerobic digestion** மூலம் திண்மப்படுத்தப்பட்டு சுத்தமான, வளமான கலப்புரமாக மாற்றப்படும்.
9. நீங்கள் கொள்கலங்கள் இரண்டையுமே தண்ணீரும் சவர்க்காரமும் கொண்டு கழுவலாம். உங்கள் உள்ளகக் கொள்கலத்தைப் பாத்திரம் கழுவும் சாதனத்துள் இடக்கூடாது.

** குறிக்கப்படாத நாளில் வெளியே இட்டு வைக்கப்படும் கழிவை அகற்றுவதற்கு வாகனங்கள் எவற்றையும் மாநகரம் அனுப்பப் போவதில்லை.*

*** Anaerobic digestion என்பது உயிர்வளி அற்ற நிலையில் பெருகும் நுண்ணுயிர்கள் மூலம் உருப்படிகளை உருக்குலைக்கும் படிமுறை ஆகும். அதன் மூலம் (சதுப்புநில வாயு, கரியமில வாயு போன்ற) மீட்கத்தக்க உயிர்ம வாயு வகைகளை உற்பத்தியாக்கலாம்.*

## பொய்த் தோற்றம் கண்டு ஏமாறாதீர்!

கழிவகற்றும் வாகனத்தில் வாடிக்கையான குப்பை இடப்படும் கூறிலேயே பச்சைக் கொள்கலத்துக் கழிவுகளும் இடப்படுவதாக நினைத்து மாநகர வாசிகள் எம்முடன் தொடர்பு கொள்வதுண்டு. கவலையை விடுங்கள்! மாநகரத்தின் கழிவகற்றும் வாகனத்தில் இரண்டு கூறுகள் உள்ளன. அவை முற்றிலும் புறம்பு புறம்பாகவே அமைந்துள்ளன. பச்சைக் கொள்கலத்துக் கழிவுகள் ஒரு கூறினுள் செல்கின்றன. குப்பையும் மீள்பாவனைப் பொருட்களும் மறு கூறினுள் செல்கின்றன.

<u>**நீங்கள் எம்மிடம் கேட்ட கேள்விகள்…**</u>

மாநகர வாசிகள் எமது வாடிக்கையாளர் சேவையை (416-338-2010) அழைத்துக் கேட்ட முக்கியமான கேள்விகளும் பதில்களும் பின்வருமாறு:

***பிராணிகள் (இறக்கூன்கள்) பச்சைக் கொள்கலத்தினுள் நுழையுமா?***
பிராணிகளைத் தடுத்து நீடித்து நிலைக்க வல்லவையாகவே கொள்கலங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பிராணிகளைத் தடுப்பதற்கு நீங்கள் மேலதிகமாக நடவடிக்கை எடுக்கலாம்:

1. பச்சைக் கொள்கலத்தை அதன் மூடியால் மூடிக் கொழுவிய பின்னரே அதனை வெளியே வைக்க வேண்டும் என்பதை மறக்க வேண்டாம்.
2. நீங்கள் உங்கள் வெளிப்புறத்துப் பச்சைக் கொள்கலத்துக்கு உள்ளுறை இட்டுப் (பாவிக்க விரும்பினால்) பாவிக்கலாம். பைகளை இழக்கமாக முடியவும் அல்லது முறுக்கவும் (முறுக்கி முடிச்சுப் போட வேண்டாம்!). உள்ளுறையைக் கொள்கலத்தினுள் முழுவதாக அமுங்கும்படி செய்த பின்னரே அதனை வெளியே வைக்க வேண்டும். உள்ளுறை வெளியே தலைகாட்டினால் பிராணிகள் அதனைப் பற்றி இழுத்துக் கொள்கலத்தைக் கவிழ்க்கக்கூடும்.
3. பச்சைக் கொள்கலத்தை தமது வீட்டுக் கொல்லைப் புறத்தில் வைத்து எடுப்பவர்கள் ஒரு விசை-நாடாவைக் கொண்டு அதன் இரண்டு கைபிடிகளையும் பிணைத்து அதன் மூடியை இறுக்கவும். கொள்கலத்தை தெருவோரத்தில் வைப்பதற்கு முன்னர் விசை-நாடாவை அகற்றவும் (நீண்ட விசை-நாடா சரிவராது).
4. இயலுமாயின், உங்கள் கொள்கலத்தை முதல்நாளிரவு வெளியே வைப்பதை விடுத்து குறித்த நாள் காலையில் வெளியே வைக்கவும்.

***எனது பச்சைக் கொள்கலத்துக்கும் சமையலறைக் கொள்கலத்துக்கும் பிளாஸ்திக்-உள்ளுறை இடவேண்டுமா?***
ஆம் - ஆனால் உங்கள் கொள்கலங்கள் இரண்டுக்கும் உள்ளுறை இடத் தேவையில்லை. நீங்கள் ஒன்றில் உங்கள் பச்சைக் கொள்கலத்துக்கு ஒரு பிளாஸ்திக்குப் பையை (அல்லது பொருந்தும் பை எதனையும்) உள்ளுறையாக இட்டுப் பாவிக்கலாம். அல்லது உங்கள் உள்ளக சமையலறைக் கொள்கலத்துக்கு ஒரு பிளாஸ்திக்குப் பையை உள்ளுறையாக இட்டுப் பாவிக்கலாம் (இதற்காகவே விற்கப்படும் பைகளை வாங்கத் தேவையில்லை. உங்கள் கொள்வனவுப் பைகளையே பாவிக்கலாம்). **உங்கள் சேதனக் கழிவுகளைப் பச்சைக் கொள்கலத்தினுள் உதிரியாக இடக்கூடாது.** கொள்கலங்களுக்கு உள்ளுறை இடுவதால் கழிவுகளின் நெடி குறையும். கையாளும்போது கொட்டிச் சிந்தாது. குளிர்காலத்தில் சேதனக் கழிவுகள் கொள்கலத்தின் உள்ளே உறைந்து இறுகாது. நீங்கள் உங்கள் கொள்கலங்களுக்கு உள்ளுறையாக இட்ட பிளாஸ்திக்குப் பைகள் மாநகரத்தின் படிமுறையிடல் களத்தில் வைத்து அகற்றப்படும். உங்கள் பச்சைக் கொள்கலத்தினுள் வேறு பிளாஸ்திக்கு வகைகள் இடுவதைத் தவிர்க்கவும். உங்கள் பைகளை இழக்கமாக முடியவும் அல்லது முறுக்கவும் (முறுக்கி முடிச்சுப் போட வேண்டாம்!). அது கழிவகற்றுவதை எளிதாக்கும்.

***கழிவு அகற்றப்படும் நாளுக்கு முன்னரே கொள்கலம் நிரம்பினால் அல்லது கனதி கூடினால் என்ன செய்வது?***
20 கிலோ (44 இறாத்தல்) எடைக்கு மேற்பட்ட ஒரு கொள்கலமோ பையோ ஏற்கப்பட மாட்டாது. ஆகவே மேலதிகமான கழிவுகளை ஒரு கண்ணாடிப் பிளாஸ்திக்குப் பையில் இட்டு வைக்கவும் (ஒரு பெரிய பையைப் பாவிக்கவும் – பல சிறிய பைகளைப் பாவிக்க வேண்டாம்). அந்தப் பையில் (கழிவுக் கச்சு, பிராணிகளின் கழிவு) போன்ற உணவு-அல்லாத கழிவு வகைகளை இட்டு வைப்பது நல்லது. அவை பிராணிகளை ஈர்க்கா அல்லவா. நீங்கள் $15 செலுத்தி ஒரு புதிய வெளிப்புறத்துப் பச்சைக் கொள்கலத்தையும், $4 செலுத்தி ஒரு புதிய உள்ளக சமையலறைக் கொள்கலத்தையும் வாங்கிப் பாவிக்கலாம்.

**கொள்கலங்கள் கிடைக்கும் இடம்:**
Scarborough Transfer Station
1 Transfer Place (மார்க்கம் வீதியில் வடக்குப் புறம், நகெற் வீதியில் இடது புறம்)

செவ்வாய் முதல் வெள்ளி வரை காலை 6:00 முதல் மாலை 5:30 வரை
சனி: காலை 6:30 முதல் பகல் 12:30 வரை

***பச்சைக் கொள்கலம் உடைந்தால் என்ன செய்வது?***
கொள்கலங்களை உற்பத்திசெய்த அமைப்பு அவற்றை நன்கு பரிசோதித்துப் பார்த்துள்ளது. அவை ஐந்து ஆண்டுகளுக்கு நீடிக்க வல்லவை என்று அது உத்தரவாதம் அளித்துள்ளது. அத்துடன் ரொறன்ரோ மாநகரமும் அவற்றைப் பரிசோதித்துள்ளது. அது அவற்றைத் தூக்கி எறிந்து பார்த்துப் பரிசோதித்துள்ளது. கழிவு அகற்றுவோரும் செயலுறுதி நிபுணர்களும் பரிசோதனைகளில் பங்குபற்றி கொள்கலங்களைப் பகுத்தாராய்ந்தார்கள். உங்கள் கொள்கலம் தெறித்தால் அல்லது உடைந்தால் அதனை ஸ்காபறோ இடைமாற்று நிலையத்துக்கு எடுத்துச் செல்லவும் (மேலே "**கொள்கலங்கள் கிடைக்கும் இடம்**" என்ற பகுதியைப் பார்க்கவும்), அல்லது மேலதிக விபரத்துக்கு வாடிக்கையாளர் சேவையை அழைக்கவும்: 416-338-2010. (மாநகர வாசிகள் தமது பச்சைக் கொள்கலத்தில் தமது முகவரியை அழியாத கறுப்பு மை கொண்டு பொறிப்பது நல்லது).

*எமது இணையத் தளத்தில் இன்னும் பல கேள்விகளும் மறுமொழிகளும் காணப்படுகின்றன: www.toronto.ca/greenbin – "அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்" என்ற பகுதியைப் பார்க்கவும்.*

**<u>நல்ல சேதி! உங்கள் நீலப் பெட்டியும் சாம்பல் நிறப் பெட்டியும் தற்பொழுது பயன்படுகின்றன</u>**

நீங்கள் சாம்பல் நிறப் பெட்டியில் இட்டு வைத்த மீள்பாவனைப் பொருட்களை ஒரு படிமுறையிடற் களத்துக்கும், நீலப் பெட்டியில் இட்டு வைத்த மீள்பாவனைப் பொருட்களை வேறொரு களத்துக்கும் மாநகரம் ஏற்றி அனுப்பி வந்தது. அந்த நடைமுறை புதிய தொழினுட்பம் கொண்டு சீரிடப்பட்டுள்ளது. ஸ்காபறோ வாசிகள் நீலப் பெட்டியிலும் சாம்பல் நிறப் பெட்டியிலும் இட்டு வைக்கும் பொருட்களை ஆகஸ்ட் மாதம் முதல் மாநகரம் ஒரே இடத்துக்கு ஏற்றி அனுப்பி வருகிறது: அது இருவகைப் பொருட்களையும் புறம்பாக்கிப் படிமுறையிடவல்ல புத்தம் புதிய களம் ஆகும்.

அதனால் மீள்பாவனைப் பொருட்களைச் சேகரிப்பதற்குத் தேவைப்படும் வாகனங்களின் எண்ணிக்கையும் பொருட்களைச் சேகரிக்கும் செலவும், வாகன நடமாட்டமும், காற்றுக் கெடுவதும் குறைய வாய்ப்புண்டு. தற்பொழுது ஸ்காபறோவில் குப்பையை அகற்றுவோர் நீலப் பெட்டியிலும் சாம்பல் நிறப் பெட்டியிலும் இட்டு வைக்கப்படும் பொருட்களைத் தமது கழிவகற்றும் வாகனத்தின் ஒரே கூறில் இடுவதற்குப் புதிய முறைமையே காரணம் என்பதும் இதனால் விளங்கும்.

***ஸ்காபறோ வாசிகள் எதையாவது வித்தியாசமாகச் செய்ய வேண்டுமா?***
இல்லை. நீங்கள் உங்கள் பெட்டிகளை இப்பொழுது பாவிப்பது போலவே தொடர்ந்தும் பாவிக்கலாம். அல்லது உங்கள் நீலப் பெட்டிக்குரிய பொருட்களையும் சாம்பல் நிறப் பெட்டிக்குரிய பொருட்களையும் கலந்து ஒரே பெட்டியில் இடலாம். இதிலுள்ள நன்மை என்னவென்றால், உங்கள் மீள்பாவனைப் பொருட்கள் அகற்றப்படும் நாளில் அவற்றின் தொகை குறைவாக இருந்தால், நீங்கள் (விரும்பும் நிறம் கொண்ட) ஒரே ஒரு பெட்டியையே தெருவோரத்துக்கு எடுத்துச் செல்லலாம்.

நீலப் பெட்டியும் சாம்பல் நிறப் பெட்டியும் இனியும் எமக்குத் தேவையா? இல்லை எனலாம். பெட்டிகள் பழுதுபட்டு, புதியவை தேவைப்படும் வேளையில் நாம் ஒரே-கொள்கல முறைமையை உருவாக்கலாம். மேலதிக விபரத்தை எதிர்பார்த்திருக்கவும்.

**<u>பச்சைக் கொள்கலத்தினுள் இடக்கூடியவை - இடக்கூடாதவை</u>**

**பச்சைக் கொள்கலத்தினுள் இடக்கூடியவை...**

பழவகை, மரக்கறிக் கழிவுகள்
இறைச்சி, சிப்பி, மீன் வகைகள்
பஸ்டா, பாண், தானிய உணவு வகைகள்
முட்டைக் கோது, பாலுணவு வகைகள்
காப்பிக் கட்டை, வடி, தேயிலைச் சரைகள்
அழுக்கு துடைப்புத் தாள், ஒற்றுத் தாள் வகைகள்

அழுக்கடைந்த உணவுச் சரைகள் – உடன் உணவு பொதிவுத் தாள், ஐஸ்கிறீம் பெட்டி, மவின் தாள், மா – சீனி பை வகைகள்
கடதாசியாலான காப்பிக் குவளை, கோப்பை வகைகள்
இனிப்பு, விசுக்கோத்து, கேக்கு வகைகள்
மூலிகை, நறுமணச் சரக்கு, வேகும் பண்டத்தில் சேரும் கூறுகள்
மண்ணுடன் கூடிய வீட்டுத் தாவரங்கள்
கழிவுக் கச்சு, உடல்தூய்மை பேணும் பொருட்கள்
பிராணிகளின் கழிவு, படுக்கை (எடுத்துக்காட்டாக பறவை/சிறு பிராணிக் கூட்டுக் கழிவு), பூனை மலம்
பிராணிகளின் உணவு வகைகள்
*பச்சைக் கொள்கலத் திட்டத்தின்படி சேதனக் கழிவு கலப்புரமாக மாற்றப்படும். அதாவது உயிர்வளி அற்ற நிலையில் பெருகும் நுண்ணுயிர்கள் மூலம் உருப்படிகளை உருக்குலைக்கும் படிமுறை (anaerobic biological process) மூலம் சேதனக் கழிவு கலப்புரமாக மாற்றப்படும். ஆகவேதான் உங்களால் வீட்டில் வைத்து கலப்புரமாக மாற்ற முடியாத சேதனக் கழிவை நாமே ஏற்கும் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம்.*

**தயவுசெய்து பின்வருவனவற்றை இடவேண்டாம்…**
**(இவை உருக்குலைய மாட்டா. ஆதலால் இவற்றைக் கலப்புரமாக மாற்ற முடியாது).**

பிளாஸ்திக்காலான பொதி உறை, கண்ணாடிச் சரை, சாண்ட்விச் பை வகைகள்
பிளாஸ்திக்காலான உணவு கொள்கலங்கள் (எ-கா: தயிர் அல்லது மாஜறின் கொள்கலங்கள்), கத்தி-முள்ளுக் கரண்டி வகைகள்
பிளாஸ்திக்காலான பால் பை வகைகள்
ஸ்டைறோபோம் (Styrofoam), இறைச்சித் தட்டுக்குப் பதிக்கும் உறை வகைகள்
உலோகச் சருகு வகைகள்
அரக்குத் தாள் வகைகள்
செயற்கைப் பூ வகைகள்
தோல், துணி, உடுப்பு வகைகள்
கம்பளி, விரிப்பு வகைகள்
சிகரெட்டு அடிக்கட்டை, புகையிலை வகைகள்
தக்கைகள் (வைன் போத்தில் தக்கைகள் முதலியவை)
சுவிங்கம்
காது சுத்தப்படுத்தும் பொருள், பஞ்சுச் சுருள், ஒப்பனைப் பொருள் அகற்றல் தட்டு வகைகள்
குழந்தைகளைத் துடைக்கும் துணி வகைகள்
ஒற்றி எறியும் துணி வகைகள்
உலர்த்தி தூசு, தகடு வகைகள்
உறிஞ்சி- பை, கழிவு வகைகள்
இறகுகள்
முடி, பிராணிகளின் உரோமம்
கணப்புச் சாம்பர், இறைச்சி வாட்டும் வாயு அடுப்பு (BBQ) சாம்பர்
மரச் சாமான், சப்பை வகைகள் (பிராணிகள் படுக்கும் தட்டுகள் தவிர்ந்தவை)

*ஹலோவீன் (Halloween) தினத்தை அடுத்து உங்கள் பூசணிக்காயை அகற்றுவதற்கு வசதியாக அதனை உங்கள் பச்சைக் கொள்கலத்தின் உள்ளேயோ மேலேயோ அருகேயோ வைக்க மறக்க வேண்டாம்.*

**ஏதாவது கேட்டறிய வேண்டுமா? மேலதிக விபரம் தேவையா?**

பச்சைக் கொள்கலத் திட்டம் குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், ரொறன்ரோ மாநகர வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொள்ளவும்: 416-338-2010, அல்லது எமது இணையத் தளத்தை நாடவும்: www.toronto.ca/greenbin.